செய்தி வெளியீடு எண்:104 நாள்:09.02.2021

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 8.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 3 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், பால்வளத் துறை சார்பில் காக்களூர் பால் பண்ணையில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை தீவன கிடங்கு மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடம், மீன்வளத் துறை சார்பில் 8 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளிக்கவும், தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்திடவும், மீன் உற்பத்தியை அதிகரித்து, மீன்வளத்தைப் பாதுகாத்து, மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்குதளங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசானது, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை மூலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பன்முக மருத்துவமனை கட்டடம்; வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், கள்ளியூர் கிராமத்தில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம்; திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனை கட்டடம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பிரதம மருத்துவமனை கட்டடம்

மற்றும் தியாகதுருகத்தில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவனை கட்டடம்;

காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் பால் பண்ணையில் சுமார் 2,500 சதுர அடி பரப்பளவில், 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை தீவன கிடங்கு மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடம்;

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மஞ்சளாறு அணை பகுதியில் அமைந்துள்ள மீன் விதை பண்ணையில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகம், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி, ஓலைக்குடா பகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கான ஆய்வு மாளிகை, மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம் மற்றும் கடல் உணவு உணவகம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல், மீன்பிடித் துறைமுகத்தில் 1 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் மீன் ஏலக்கூடம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் கிராமத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன் வளர்ப்பு மையம்,

என மொத்தம் 12 கோடியே 38 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 2019–2020ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 2 கோடியே 40 லட்சத்து 64 ஆயிரத்து 222 ரூபாயில், ஏற்கனவே வழங்கப்பட்ட 1 கோடி ரூபாய் பங்கு ஈவுத் தொகை போக, மீதமுள்ள பங்கு ஈவுத் தொகையான 1 கோடியே 40 லட்சத்து 64 ஆயிரத்து 222 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திரு.அ. ஞானசேகரன், இ.ஆ.ப., பால்வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆர். நந்தகோபால், இ.ஆ.ப., மீன்வளத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**